சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

முன்னிலை : திருமதி.A.பர்சாத் பேகம் பிஏ.எம்.எல்.,

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 31 -ம் நாள்,வெள்ளிக்கிழமை.

**எச்.எம்.ஓ.பி.எண்.16/2026**

**(CNR.No.TNTT19 -000112 - 2026)**

ஆரோக்கியமேரி ... மனுதாரர்

/ எதிர் /

முருகேஷ் ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 03.07.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.நீதி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதி அவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும் மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(ia) ன் கீழ் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 27.11.2014 ல் காலாங்கரை அய்யா கோவிலில் நடந்த திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடும்படிக்கும் செலவுத்தொகை கோரியும்

இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் -**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் காலாங்கரையில் அமைந்துள்ள அய்யா கோவிலில் வைத்து இந்து முறைப்படி கடந்த 27.11.2014 அன்று திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்தின் பயனாய் உபயமனுதாரர்களுக்கு கடந்த 24.8.2015 அன்று ஜெனிபர் என்ற பெண்குழந்தை பிறந்துள்ளது. திருமணத்தின்போது எதிர்மனுதாரர் எலக்ட்ரீசியனாய் வேலை பார்த்து வந்தார். திருமணத்தின்போது மனுதாரரின் பெற்றோர் 4 பவுன் தங்க நகையும் போதிய சீர்சீராட்டும் செய்து திருமணம் நடத்தி வைத்தார்கள். எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு 2 பவுண் தாலி மட்டுமே மஞ்சள் கயிற்றில் இணைத்து அணிவித்தார்கள். திருமண செலவுகளை மனுதாரரின் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டார்கள். திருமணம் முடிந்த பின் எதிர்மனுதாரர் ஊதாரித்தனமாய் சுற்றி வந்ததால் எதிர்மனுதாரரின் பெற்றோர்களின் ஏற்பாட்டின் பேரில் மும்பையில் சொந்த வீடு இருந்ததால் அங்கு வேலை தேடி வாழ வேண்டி எதிர்மனுதாரரும் மனுதாரரும் அங்கு சென்றார்கள். அப்போதுதான் எதிர்மனுதாரர் கஞ்சா போதைக்கு அடிமையானவர் என்பது தெரியவந்தது. எதிர்மனுதாரர் வேலைக்கு செல்லாமல் தொடர்ந்து கஞ்சா அடித்துவிட்டு வந்து மனுதாரருடன் சண்டை போட்டு மனுதாரரை நிம்மதியாய் இருக்கவிடவில்லை. எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் அவருக்கு சாதகமாய் செயல்பட்டு வந்தார்கள். குடிப்பழக்கத்திற்கும் போதைக்கும் அடிமையான எதிர்மனுதாரர் ஒருநாள் மனுதாரரிடம் சண்டைபோட்டு மனுதாரரை அடித்து

காயப்படுத்தி 4 பவுன் செயினையும் அவரிடமிருந்து பறித்து அதனை விற்று அதிலிருந்த பணத்தை வைத்து குடித்துக்கொண்டிருந்தார். இதனால் மனுதாரரின் தந்தைக்கு தகவல் சொல்லி மனுதாரரின் தந்தை மும்பைக்கு சென்று மனுதாரரை ஊருக்கு கூட்டிச் சென்றார். அப்போது தான் மனுதாரருக்கு இரண்டு மாதம் கர்ப்பிணி என்று தெரியவந்தது. உடனே எதிர்மனுதாரரும் ஊருக்கு வந்துவிட்டார். மனுதாரர் கர்ப்பிணி என்று தெரிந்தும் மனுதாரரிடம் அடிக்கடி குடித்துவிட்டு வந்து சண்டையிட்டு வந்தார். மனுதாரர் கர்ப்பமாக இருப்பதை கவனத்தில் கொள்ளாமலும் மருத்துவம் பார்க்காமலும் ஊதாரியாக இருந்துள்ளார். மனுதாரர் 9 மாத கர்ப்பமாக இருந்தபோது எதிர்மனுதாரர் குடிபோதையில் அடித்து கீழே தள்ளிவிட்டார். மனுதாரர் அந்த சமயத்தில் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து வருகிறார். 24.08.2015 ம் ஆண்டு மனுதாரருக்கு பெண்குழந்தை பிறந்துள்ளது. அந்த குழந்தையை எதிர்மனுதாரரோ அவரது பெற்றோர்களோ யாருமே பார்க்க வரவில்லை. மனுதாரர் குழந்தையுடன் அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வந்தபோது எதிர்மனுதாரர் அங்கு சென்று மனுதாரரிடமும் அவரது பெற்றோரிடமும் தகராறு செய்துள்ளார். உடனே மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர் முறப்பநாடு காவல் நிலையத்தில் சென்றுபுகார் கொடுத்தனர். அப்போது எதிர்மனுதாரர் மனுதாரரின் பெற்றோர் வீட்டின் கதவு பூட்டை உடைத்து வீட்டினுள் நுழைந்து பீரோவை உடைத்து அதிலிருந்த 3 பவுன் தாலி செயின், ரூ.50,000 பணம் மற்றும் மனுதாரரின் கல்யாண ஆல்பத்தையும் திருடி சென்றுவிட்டார். இதனை எதிர்மனுதாரர் மனுதாரரின் தகப்பனாரிடம் கைப்பேசியில் தொடர்பு கொண்டு மேற்படி செய்தியை

சொல்லி உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று மிரட்டிவிட்டு கைபேசியை துண்டித்துள்ளார். இதனால் மீண்டும் மனுதாரரின் தகப்பனார்முறப்பாடு காவல் நிலையத்தில் புகார் அளித்தபோது மருமகன் எப்படி திருடுவான் என்று கூறி எதிர்மனுதாரர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொடர்ந்து தகராறு செய்து வருவதால் மனுதாரர் இனிமேல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்புகள் இல்லை. எனவே இனிமேலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினாலும் 2015 ம் ஆண்டு முதல் மனுதாரா எதிர்மனுதாரரை விட்டு விவாகரத்து கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3**. எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகவில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

**4**. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

**<u>5. தீர்வு காண வேண்டிய பிரச்சனை :-</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**6**. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டன.

**7**. மனு சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனு சங்கதிகளை அனுசரித்து அவரது முதல் விசாரணை

சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8**. உபய மனுதாரர்கள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் இரு வீட்டு பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு காலாங்கரையில் அமைந்துள்ள அய்யா கோவிலில் வைத்து இந்து முறைப்படி கடந்த 27.11.2014 அன்று திருமணம் நடைபெற்றதாக கூறி திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.2 ஆகவும், குழந்தையின் பிறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

**9**. மேற்படி திருமணத்தின் பயனாய் உபயமனுதாரர்களுக்கு கடந்த 24.8.2015 அன்று ஜெனிபர் என்ற பெண்குழந்தை பிறந்ததாகவும், திருமணத்தின்போது எதிர்மனுதாரர் எலக்ட்ரீசியனாய் வேலை பார்த்து வந்ததாகவும் திருமணத்தின்போது மனுதாரரின் பெற்றோர் 4 பவுன் தங்க நகையும் போதிய சீர்சீராட்டும் செய்து திருமணம் நடத்தி வைத்ததாகவும் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு 2 பவுண் தாலி மட்டுமே மஞ்சள் கயிற்றில் இணைத்து அணிவித்ததாகவும் திருமண செலவுகளை மனுதாரரின் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

**10**. மேலும் அவரது சாட்சியத்தில் திருமணம் முடிந்த பின் எதிர்மனுதாரர் ஊதாரித்தனமாய் சுற்றி வந்ததால் எதிர்மனுதாரரின் பெற்றோர்களின் ஏற்பாட்டின் பேரில் மும்பையில் சொந்த வீடு இருந்ததால் அங்கு எதிர்மனுதாரரும் மனுதாரரும் அங்கு சென்றார்கள். அங்கு சென்ற பின்னர்தான் எதிர்மனுதாரர் கஞ்சா போதைக்கு அடிமையானவர் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் வேலைக்கு

செல்லாமல் கஞ்சா அடித்துவிட்டு மனுதாரருடன் சண்டை போட்டு மனுதாரரை நிம்மதியாய் இருக்கவிடவில்லை என்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் அவருக்கு சாதகமாய் செயல்பட்டு வந்ததாகவும் இவ்வாறு குடிப்பழக்கத்திற்கும் போதைக்கும் அடிமையான எதிர்மனுதாரர் ஒருநாள் மனுதாரரிடம் சண்டைபோட்டு மனுதாரரை அடித்து காயப்படுத்தி 4 பவுன் செயினையும் அவரிடமிருந்து பறித்து அதனை விற்றுவிட்டு அதிலிருந்த பணத்தை வைத்து குடித்துக்கொண்டிருந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**11**. இதனால் மனுதாரரின் தந்தைக்கு தகவல் சொல்லி மனுதாரரின் தந்தை மும்பைக்கு சென்று மனுதாரரை ஊருக்கு கூட்டிச் சென்றதாகவும் அப்போது தான் மனுதாரருக்கு இரண்டு மாதம் கர்ப்பிணி என்று தெரியவந்ததாகவும் உடனே எதிர்மனுதாரரும் ஊருக்கு வந்துவிட்டார் என்றும் மனுதாரர் கர்ப்பிணி என்று தெரிந்தும் மனுதாரரிடம் அடிக்கடி குடித்துவிட்டு வந்து சண்டையிட்டு வந்தார் என்றும் மனுதாரர் கர்ப்பமாக இருப்பதை கவனத்தில் கொள்ளாமலும் மருத்துவம் பார்க்காமலும் ஊதாரியாக இருந்துள்ளார் என்றும் மனுதாரர் 9 மாத கர்ப்பமாக இருந்தபோது எதிர்மனுதாரர் குடிபோதையில் அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**12**. மனுதாரர் அந்த சமயத்தில் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து வருகிறார் என்றும் 24.08.2015 ம் ஆண்டு மனுதாரருக்கு பெண்குழந்தை பிறந்ததாகவும் அந்த குழந்தையை எதிர்மனுதாரரோ அவரது பெற்றோர்களோ யாருமே பார்க்க வரவில்லை என்றும் மனுதாரர் குழந்தையுடன் அவரது பெற்றோர்

வீட்டில் வசித்து வந்தபோது எதிர்மனுதாரர் அங்கு சென்று மனுதாரரிடமும் அவரது பெற்றோரிடமும் தகராறு செய்துள்ளதாகவும் உடனே மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர் முறப்பநாடு காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தனர் என்றும் அப்போது எதிர்மனுதாரர் மனுதாரரின் பெற்றோர் வீட்டின் கதவு பூட்டை உடைத்து வீட்டினுள் நுழைந்து பீரோவை உடைத்து அதிலிருந்த 3 பவுன் தாலி செயின், ரூ.50,000 பணம் மற்றும் மனுதாரரின் கல்யாண ஆல்பத்தையும் திருடி சென்றுவிட்டதாகவும் அதனை எதிர்மனுதாரரே மனுதாரரின் தகப்பனாருக்கு போன் செய்து சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. மீண்டும் மனுதாரரின் தகப்பனார் முறப்பாடு காவல் நிலையத்தில் சென்று புகார் அளித்தபோது மருமகன் எப்படி திருடுவான் என்று கூறி எதிர்மனுதாரர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தொடர்ந்து தகராறு செய்து வருவதால் மனுதாரர் இனிமேல் எதிர்மனுதுாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்புகள் இல்லை. எனவே இனிமேலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினாலும் 2015 ம் ஆண்டு முதல் மனுதாரர் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து விவாகரத்து கோரி ம.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

14. இந்த மனுவில் பேரிலான விசாரணைக்கு ஆஜராகும்படி எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு அனுப்பியும் அறிவிப்பை பெற்றுக்கொள்ள மறுத்ததோடு எதிர்மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுக்கவில்லை நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை செய்யவில்லை. மனு சங்கதிகளை ஆட்சேபித்தும் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை ஆட்சேபித்தும் வழக்கு

நடத்திட எதிர்மனுதாரர் முன் வரவில்லை எனவும் தீர்மானிக்கிறது. மனுதாரரின் சாட்சியம் வாயிலாக எதிர்மனுதாரருக்கு மனுதாரருடன் சேர்ந்து வாழும் எண்ணம் இல்லை என்றும் அறியமுடிகிறது.

15. மனுதாரரின் சாட்சியத்தின் வாயிலாக எதிர்மனுதாரர் குடிப்பழக்கம், கஞ்சா பழக்கம் உள்ளவர் என்றும் மனுதாரருடன் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல் மனுதாரரை மனதளவிலும் உடலளவிலும் கொடுமைகள் செய்துள்ளார் என்று துலங்குகிறது. எனவே மனு சங்கதிகளை மனுதாரர் உரிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் வாயிலாக நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. எனவே மனுதாரரும் எதிர்மனுதாரரும் இனியும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால் அவர்களுடைய திருமண வாழ்க்கை மீள முடியாத அளவிற்கு பிளவு பட்டு விட்டது என தீர்மானித்து மனுதாரர் கேட்டுள்ளவாறு விவாகரத்து பரிகாரம் வழங்குவது நீதிக்குகந்தது என முடிவு செய்து மனுதாரர் கேட்டுள்ள பரிகாரத்தை அவருக்கு வழங்கிட இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில், மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.11.2014 ம் தேதியில் காலாங்கரை அய்யாகோவிலில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்து, 2026 ஆம்

ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2026.07.31 17:30:40 +0530

. சார்பு நீதிபதி

திருவைகுண்டம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி -**

மசா.1 திருமதி.ஆரோக்கியமேரி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -**

| | | |
|---|---|---|
| மசாஆ.1 | 27.11.2014 | திருமண அழைப்பிதழ் |
| ம.சா.ஆ-2 | | ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) |
| மசாஆ.3 | | குழந்தையின் பிறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் -** இல்லை

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2026.07.31 17:30:17 +0530

சார்பு நீதிபதி,

திருவைகுண்டம்.

சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்

எச்.எம்.ஓ.பி.எண்.16/2026

நேரிய/வரைவு உத்தரவு

நாள்: 31. 07. 2026